ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/12 - 2020 ඔක්තෝබර් මස 28 වැනි බදාදා - 2020.10.28

*2199/12 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XV) (அ).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் அதன் மூலம் தாபிக்கப்பட்ட, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 24அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24 ஆ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைக் கொண்டிருந்த 1995 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 859/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியிலிருந்து இத்தால் இல்லாதொழிக்கின்றேன்.

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, ஒற்றோபர் 27.

1A - PG 5205 — 521 (2020/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*ச. வ. பி. 21/78* (XV) (*அ*).

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்*

21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *21* ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இக்கட்டளை மூலம்-

(*அ*) சுதேச மருத்துவம், சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் அத்துடன் சுதேச சமூக விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் என்பவற்றின் கற்றற் கிளைகளில் உயர் கல்வியை வழங்கும், மேம்படுத்தும் அத்துடன் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக, *2021* ஆம் ஆண்டு மாச்சு மாதம் *01* ஆந் திகதியிலிருந்து பல்கலைக்கழகமொன்றைத் தாபிக்கின்றேன். இப்பல்கலைக்கழகமானது, இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ;

(*ஆ*) அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு "இலங்கை, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்" என்ற பெயர்மகுடத்தைக் குறித்தளிக்கின்றேன் ;

(*இ*) கம்பஹா நிருவாக மாவட்டத்தினுள் அத்தகைய பல்கலைக்கழகத்தின் இருப்பிடமாகவிருக்க வேண்டிய அமைவிடத்தைக் குறித்துரைக்கின்றேன் ;

(*ஈ*) தெரிவுசெய்யப்பட்ட கற்கைகளில் விசேடித்துவத்தை அபிவிருத்தி செய்யும் இயல்திறனுடன் திடமானவோர் அடிப்படையைக் கொண்ட கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் இலக்குடன் பரந்தளவிலான தொடர்புபட்ட கற்கைகளுடன் சம்பந்தப்பட்ட கற்கைநெறிகளை இப்பல்கலைக்கழகம் அபிவிருத்தி செய்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ;

(*உ*) உள்நாட்டு மூலவள அடிப்படையினுள் விழுமியத்தை உருவாக்குதல் பற்றி மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதன்மீது இப்பல்கலைக்கழகம் கூடுதலான அழுத்தத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ; அத்துடன்

(*ஊ*) இதற்கான அட்டவணையின் முறையே நிரல் I இலும் II இலும் தரப்பட்டுள்ள பீடங்களையும் கற்கைத் துறைகளையும் பல்கலைக்கழகம் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

### அட்டவணை

| | *நிரல் I* *பீடம்* | *நிரல் II* *கற்கைத் துறைகள்* |
|---|---|---|
| 1. | சுதேச மருத்துவப் பீடம் | ஆயுர்வேத அடிப்படை நெறிகள் துறை<br>சிகிச்சைத் துறை<br>திரவியகுண விஞ்ஞானத்துறை<br>கௌமாரபிரித்தியா மற்றும் ஸ்ரீரோகத் துறை<br>சல்லிய சாலாக்கியத் துறை<br>மொழிகள் துறை<br>ரோக விஞ்ஞானத்துறை<br>தேசிய சிகிச்சைத் துறை |
| 2. | சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியற் பீடம் | சுதேச சுகாதார விஞ்ஞானத்துறை<br>தொழில்நுட்பவியல் துறை<br>சுதேச மருத்துவ மூலவளத்துறை |
| 3. | சுதேச சமூக விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடம் | சுதேச சமூக விஞ்ஞானங்கள் துறை<br>முகாமைத்துவக் கற்கைகள் துறை |
| 4. | பட்டதாரிக் கற்கைகள் பீடம் | |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2020*, ஒற்றோபர் *27*.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.